

தமிழ்நாடு முதலமைச்சர் .மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.5.2025) திருச்சிராப்பள்ளி, புத்தூர், பெரியார் சாலையில் அமைக்கப்பட்டுள்ள நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, அருகில் அலங்கரித்து வைக்கப்பட்ட அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, அருண் நேரு. சட்டமன்ற உறுப்பினர் இனிகோ எஸ். இருதயராஜ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், நடிகர்கள் ராம்குமார், பிரபு, விக்ரம் பிரபு மற்றும் விழாக்குழுவினர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.5.2025) திருச்சிராப்பள்ளி, புத்தூர், பெரியார் சாலையில் அமைக்கப்பட்டுள்ள நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சி சிவா எம்.பி. , அருண் நேரு எம்.பி. , இனிகோ எஸ். இருதயராஜ் எம்.எல்.ஏ., உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், நடிகர்கள் ராம்குமார், பிரபு, விக்ரம் பிரபு மற்றும் விழாக்குழுவினர் உடனிருந்தனர்.





திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (08.05.2025) திருச்சியில் நடைபெற்ற 'திருச்சி மாவட்டக் கழக நிர்வாகிகளுடனான சந்திப்பு' நிகழ்ச்சியில் பங்கேற்று, 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் பணிகளுக்கான வழிகாட்டுதல்களை வழங்கினார்.

## மலைக்கோட்டை மாநகரில் மக்களின் அன்பு வெள்ளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ரோட்ஷோ!









பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நேற்று (8.5.2025) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, டி.வி.எஸ். டோல்கேட் முதல் கரூர் பைபாஸ் சாலை வரையில், பொதுமக்கள் அளித்த உற்சாக வரவேற்பின்போது, குழந்தையை கொஞ்சி மகிழ்ந்தார்.



திருச்சி வருகை தந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு, டி.வி.எஸ். டோல்கேட் முதல் கரூர் பைபாஸ் சாலை வரையில், பொதுமக்கள் அளித்த உற்சாக வரவேற்பின்போது, குழந்தையை கொஞ்சி மகிழ்ந்தார்.



பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நேற்று (8.5.2025) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு வருகை தந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு, டி.வி.எஸ். டோல்கேட் முதல் கரூர் பைபாஸ் சாலை வரையில், பொதுமக்கள் அளித்த உற்சாக வரவேற்பின்போது, அவர்களுடன் செல்ஃபி புகைப்படம் எடுத்துக்கொண்டார்.